**மானிடக் கலைகள் மற்றும் சமூகவியல் உயர் கற்கைகளிற்கான தேசிய நிலையம் - 2014**

மானிடக் கலைகள் மற்றும் சமூகவியல் உயர் கற்கைகளிற்கான தேசிய நிலையத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, நிதியத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 2005 இன் 02 ஆம் இலக்க மானிடக் கலைகள் மற்றும் சமூகவியல் உயர் கற்கைகளிற்கான தேசிய நிலைய அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. <u>நிதிக்கூற்றுக்கள்</u>

### 2.1 <u>அபிப்பிராயம்</u>

மானிடக் கலைகள் மற்றும் சமூகவியல் உயர் கற்கைகளிற்கான தேசிய நிலையத்தின் 2014 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2005 ஆம் ஆண்டின் போது பட்டபின்படிப்பிற்காக மானியங்களை வழங்கியதன் பின்னர் இரத்துச் செய்யப்பட்ட பெண் உத்தியோகத்தரிடமிருந்து நிறுவனத்திற்குக் கிடைக்க வேண்டிய ரூபா 193,518 தொகை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2005 இன் 02 ஆம் இலக்க மானிடக் கலைகள் சமூகவியல் கட்டளைகளின் 9 ஆம் பந்தி | ஒரு வருடத்தில் குறைந்தது இரண்டு தடவையாவது ரீஜன்ட் கவுன்சில் கூட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது ஒரு தடவை மாத்திரம் கூடப்பட்டிருந்தது. |
| (ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | உழைக்கும் போதே வரி அறவிடும் போது நிலையத்தின் அண்மித்த மற்றும் சிரேஷ்ட அண்மித்த மூன்று அங்கத்தவர்களுக்கு படியாகச் செலுத்தப்பட்ட ரூபா 1,125,000 தொகை கவனத்தில் கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | நிதிப்பிரமாணத்திற்கு முரணாக 19 சந்தர்ப்பங்களின் போது ரூபா 20,000 இற்கு |

| | | |
|---|---|---|
| | | மேற்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 751 | பொருட் பதிவேடு உரிய பிரகாரம் பராமரிக்கப்படாதிருந்ததுடன் பொருள் பெறுவனவுகள் மாத்திரம் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிலையத்தின் நிதி விளைவுகள் ரூபா 100,511 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 166,709 ஆனமையால் முன்னைய ஆண்டின் மிகை ரூபா 166,709 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 66,198 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது வருமானம் ரூபா 17 மில்லியனால் அதிகரித்திருந்த போதிலும் ஆளணி வேதனச் செலவினம் ரூபா 1,313,768 இனாலும், வழங்கல் செலவினம் ரூபா 206,197 இனாலும், பராமரிப்புச் செலவினம் ரூபா 219,695 இனாலும் மற்றும் கலாநிதி பட்டப்படிப்பு மானியம் ரூபா 12,360,305 இனாலும் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புலமைப்பரிசிலுக்குரிய கலாநிதிப் பட்டபபடிப்பு 03 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையான காலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2005 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் புலமைப்பரிசில் மானியமாக ரூபா 56,060,497 தொகை வழங்கப்பட்ட 48

மானியப் பெறுநர்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பாடநெறியைப் பூர்த்தி செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி 10 நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதில் 09 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

மதிப்பீட்டின் அடிப்படையில் முற்பணம் வழங்கும் போது தேவையினை உரிய பிரகாரம் மதிப்பிடாமையினால் தேவையினை விஞ்சி முற்பணம் வழங்கப்பட்ட காரணத்தால் 25 சதவீதம் மதல் 74 சதவீதம் வரையிலான வீச்சில் மீளத் தீர்க்கப்பட்டிருந்தது.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

கற்கை நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்படாமையின் காரணமாக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 750,000 தொகையான மானியம் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் வழங்கப்பட்ட பணத்தில் ரூபா 550,000 மாத்திரம் அவரிடமிருந்து அறவிடப்பட்டு எஞ்சிய ரூபா 200,000 ஆரம்ப கற்கை நடவடிக்கைகளுக்கு செலவிடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டு கட்டுப்பாட்டுச் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

**4.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

2012 ஆம் ஆண்டின் போது புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி செய்வதற்காகக் கிடைத்த ரூபா 10,682 தொகையும், 2014 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 720,650 தொகையும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

வருடாந்த பாதீட்டையும் நிதிக்கூற்றுக்களையும் ஒப்பிடக்கூடிய வகையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாமையினால் நிலையத்தின் இலக்கினை நிறைவேற்றும் செயல்முன்னேற்றத்தை முறையாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டில் 2003 யூன் 02 ஆந் திகதியை பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிராததுடன் பாதிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே 19 சதவீதம் முதல் 44 சதவீதம் வரையிலான இடைவெளியில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையாகல் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.3 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

மானிடக் கலைகள் மற்றும் சமூகவியல் ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்ட துறைகளுக்குப் புறம்பாக ஏனைய துறைகளுடன் தொடர்புடைய விரிவுரையாளர்களுக்கு மானியங்களை வழங்குவதற்காக அந்த ஒழுங்கு விதிகள் திருத்தப்பட வேண்டியமை 2011 யூலை 05 ஆந் திகதி நடைபெற்ற போது முயற்சிகள் குழுவின் கூட்டத்தில் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது ஒழுங்கு விதிகள் திருத்தப்படாமல் உரிய மானியங்கள் வழங்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது நிலையத்தின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) நிதி முகாமைத்துவம்

(இ) வாகனக் கட்டுப்பாடு

(ஈ) உள்ளகக் கணக்காய்வு